சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 08.05.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 4806/E/2024**

திருமதி.D.கிறிஸ்டினா ராஜபிரியா -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
இளநிலை நிர்வாக அலுவலர்,
அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, பொது அதிகார அமைப்பு
நாளிகபேட்டா அக்ரஹாரம், காரப்பள்ளி,
இராயக்கோட்டை ரோடு, ஓசூர்- 635 109.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 18.02.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திருமதி.S.உமா, இளநிலை நிர்வாக அலுவலர், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, ஓசூர் அவர்கள் இவ்வாணையத்தில் 08.05.2026-ல் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 18.02.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவல் தொடர்பான ஆவணங்களை மனுதாரர் சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் 27.04.2026 முதல் 30.04.2026 வரை அல்லது 02.05.2026 முதல் 06.05.2026 ஆகிய ஏதேனுமொரு வேலை நாளில் ஓசூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு வந்து குறிப்பெடுத்துக்கொள்ள மற்றும் புக்கப்படம்/ வீடியோ எடுத்துக்கொள்ள மனுதாரருக்கு பொதுத் தகவல் அலுவலரின் ந.க.125/அக/2024 நாள் 21.04.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் மனுதாரதர் தன்னால் மேற்கண்ட நாட்களில் வர இயலவில்லை எனவும், மேலும் 15 நாட்கள் கழித்து ஓசூர் அரசு மருத்துவமனைக்கு வருவதாகவும், 05.05.2026 அன்று அலைபேசி

வாயிலாக மனுதாரர் தெரிவித்துள்ளதாகவும், பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவல் தொடர்பான ஆவணங்களை சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ், (18.02.2026 தேதியிட்ட இவ்வாணைய உத்தரவில் தெரிவித்துள்ளவாறு) பார்வையிட்டு குறிப்பெடுத்துக்கொள்ள மீண்டும் மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி, அதன்படி, மனுதாரர், தகவல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டு குறிப்பிட்டுக் கோரும் தகவல்களை, கட்டணம் ஏதுமின்றி, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 05.06.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 4806/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/ நிர்வாக அலுவலர்,
அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை,
ஓசூர், நாளிகபேட்டா அக்ரஹாரம், காரப்பள்ளி,
ராயக்கோட்டை, ஓசூர் ரோடு, ஓசூர் - 635 109,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி.D.கிறிஸ்டினா ராஜபிரியா, க/பெ.லேட்.தேவக்குமார்,
க.எண்.34, டாக்டர் அம்பேத்கர் தெரு,
அரும்பாக்கம், சென்னை - 600 106.

Copy to: File MP/PA,